ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD**
**முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு**

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

# வெற்றிடம்

கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்காக இந்த சபையின் சேவையில் இணைவதற்கு நிரூபிக்கப்பட்ட திறன் மற்றும் தொழில்முறை திறன்களுடன் போட்டித்தன்மை மற்றும் அதிக ஊக்கமுடைய இலங்கை பிரஜைகளிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**(1) பணிப்பாளர் நாயகம் பதவி (HM 2-2)**

**தொழில் விபரம் :**

- தலைவர் மற்றும் தலைமை நிர்வாகியினால் எழுத்துமூலம் மற்றும் தேவைக்கு அமைய அவ்வப்போது வழங்கப்படும் நிர்வாக நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பிலான அதிகாரம், பணிகள் அல்லது கடமைகளை செயற்படுத்துவதற்கு பொறுப்பு வகித்தல் வேண்டும்.
- அவர் பிரதிநிதித்துவ செயற்பாடுகளுக்கு தொடர்புடைய அமைச்சரவைகளுக்கு இடையிலான நிகழ்ச்சிகளில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் சபையை பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும்.
- நிர்வாகம், நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்து பிரிவுகள்/ அலகுகளுக்கு தேவையான வழிகாட்டலை அவர் வழங்குதல் வேண்டும்.
- தலைவர் மற்றும் தலைமை நிர்வாகியினால் நியமிக்கப்பட்டவராக அமைப்பின் ஒட்டுமொத்த நிர்வாகம், நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பொறுப்பு வகிப்பார்.
- குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால நிகழ்ச்சிகளை மேம்படுத்துவது உட்பட அமைப்பின் அன்றாட முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருப்பார்.
- தவிர, பணிப்பாளர் நாயகம் சபைக்கு செயலாளராக இருப்பார்.

**தகைமைகள்** :

**(a) வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு (கீழுள்ள 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ சர்வதேச உறவுகள்/ பொருளியல்/ வர்த்தகம்/ விஞ்ஞானம்/ விவசாயம்/ வர்த்தக நிர்வாகத் துறையில் இளமாணிப் பட்டம்

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு பட்ட தகைமை ஒன்று (முதுமாணி)

   மற்றும்

   முதல் பட்டம் பெற்ற பின் “முகாமைத்துவ தரம்” ஒன்றில் குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம். அதில் 05 ஆண்டுகள் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ சர்வதேச உறவுகள்/ பொருளியல்/ வர்த்தகம்/ விஞ்ஞானம்/ விவசாயம்/ வர்த்தக நிர்வாகத் துறையில் இளமாணிப் பட்டம்

   அத்துடன்

   எந்த ஒரு தொடர்புடைய துறையிலும் கலாநிதிப் பட்டம்.

   மற்றும்

   முதல் பட்டம் பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ அனுபவம் மற்றும் நிரூபிக்கப்பட்ட தளப்பதிவு ஒன்றுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் அனுபவம்.

**(b) உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு :**

சபையில் சிரேஷ்ட முகாமையாளர் பிரிவில் (HM 2-1) உள்ள பதவி ஒன்றில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் திருப்திகரமான சேவை

மற்றும்

பல்துறை அணிகளை தலைமையேற்ற மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறன். மனித மற்றும் மற்ற வளங்களின் முறையான பணியமர்த்தல் மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்.

**(c) அரச சேவை அதிகாரிகளுக்கு :**

இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரி ஒருவராக இருக்கும் பட்சத்தில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் வேலையை மேற்கொள்வதற்கு இரண்டாம் நிலை அடிப்படையில் நியமிக்க முடியும் என்பதால் விண்ணப்பிக்க முடியும்.

**சம்பள அளவு (HM2-2)** : ரூபா 93,020/- 12 x 2,700/- = Rs. 125,420/- (மாதாந்தம்) மற்றும் அரசாங்கம் அங்கீகரித்த கொடுப்பனவுகள்.

**வயது** : 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**தேர்வு முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**மேலுள்ள பதவிக்கு பொருந்தும் மற்ற தகைமைகள் :**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உள தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**ஏனைய நன்மைகள் :**

- 2016.10.27 ஆம் திகதிய PED 1/2015 (i) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி வாகனம் ஒன்று பெற்றுத்தரப்படும்.
- ஏ.அ.ச. இன் மருத்துவ உதவித் திட்டம்.
- சுற்றுநிருபங்களின்படி பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்கல்/ வருடாந்த கொடுப்பனவுகள்.
- சலுகை வட்டி விகிதங்களில் வீட்டுக் கடன் மற்றும் இடர் கடன்.
- ஊ.சே.நி. - ஊழியர் - 10%; சபை - 15% மற்றும் ஊ.ந.நி. - சபை 3%

**எவ்வாறு விண்ணப்பிப்பது :**

நீங்கள் மேலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 08 ஆவது மாடியில் அமைந்துள்ள மனித வள முகாமைத்துவ பிரிவு அல்லது www.srilankabusiness.com என்ற இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொண்ட (“Announcements” பிரிவின் கீழ்) EDB வடிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024.03.18 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் குறித்த அனைத்து கல்வி மற்றும் அனுபவத்தை உறுதி செய்கின்ற சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள், குறித்த அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்காதிருத்தல் அல்லது முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச துறை பணியாளர்களின் விண்ணப்பங்கள் தமது நிறுவனத்தின் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த விண்ணப்பத்தின் மேலதிக பிரதி ஒன்றை விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் திகதிக்கு முன்னர் தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரிக்கு அனுப்புவதற்கு விண்ணப்பதாரர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம்: 02/2020 ஐ கொண்ட 2020.10.26 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாதிருக்கும் பொறுப்பு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் வசமானதாகும்.


**தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரி,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.**
**தொ.: 011-2300700**